Previous Date of examination : 07.06.2022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No.63/2018**

2023-ம் ஆண்டு மார்ச் மாதம் 21 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா.10 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | வயது | 31/2023 |
| தகப்பனார் பெயர் | மணி | ஜாதி | |
| தொழில் | தனியார் வேலை | மதம் | |
| ஊர் | அச்சுதமங்கலம் | தாலுக்கா | |

( 3 வது எதிரி ஆஜர், 1, 2 வது எதிரிகள் ஆஜரில்லலை. கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் மனுதாக்கல்செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

**(1)** நான் தற்போது அச்சுதமங்கலத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜரில் உள்ள எதிரியை தெரியாது. எனக்கு எதிரி செந்தில்நாதனை தெரியும். எதிரி சையது சுல்தானை தெரியாது. எனக்கு எனது நண்பர் வெங்கடசுப்பிரமணியன் என்பவர் வெளிநாடு செல்வதற்கு முயற்சித்துக்கொண்டு இருந்தார். அவர் என்னிடம் செந்தில்நாதன் என்பவர் அவருக்கு வேலை ஏற்பாடு செய்ததாக சொன்னார். எனக்கும் வேலை கிடைக்குமா? என்று கேட்டேன். செந்தில்நாதனிடம் கேட்டுவிட்டு சொல்கிறேன் என்றார். செந்தில்நாதன் ஏற்பாடு செய்வதாக சொன்னார் என கூறினார். அதன் பிறகு நான் வெங்கடசுப்பிரமணியன் வீட்டில் வைத்து செந்தில்நாதனை நான் பார்த்தேன். மொத்தம் ரூ. 75 ஆயிரம் சவுதி நாட்டிற்கு வேலைக்கு போக ஆகும் என்று சொன்னார். முதலில் நான் ரூ.58 ஆயிரம் பணமும், எனது பாஸ்போர்ட்டையும் கொடுத்தேன். அதன் பிறகு அக்டோபர் மாதம் 2015 ம் வருடம் விஷா நகல் ஒன்றை காட்டி மீத தொகையை கொடுக்குமாறு சொன்னார். மீதம் ரூ.17 ஆயிரத்தை நான் செந்தில்நாதன் வங்கி கணக்கில் இந்தியன் வங்கி மூலமாக எனது தகப்பனார் செலுத்தினார். செந்தில்நாதனின் வங்கி கணக்கு எண்.962810308 இந்தியன் வங்கி கணக்காகும். அதில் 12.10.2015 ம் தேதி ரூ.17 ஆயிரத்தை செலுத்தினோம்.

**(2)** அதன் பிறகு செந்தில்நாதன் போனை எடுக்கவில்லை. போன் சுவிட்ச் ஆப் என வந்தது. புகார் கொடுக்கலாம் என வந்தபோது என்னை போல் பலபேரிடமும் பணம் வாங்கி

ஏமாற்றிய விபரம் தெரியவந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு ஏற்பட்ட பணம் இழப்பிற்கு மாவட்ட குற்றப்பிரிவில் புகார் கொடுத்தேனா? என்றால் இல்லை. நான் எதிரி செந்தில்நாதன் வங்கி கணக்கில் பணம் செலுத்தியதற்காக வங்கி செலானை நான் காவல் துறையினரிடம் கொடுத்தேன். எனது நண்பர் வெங்கடசுப்பிரமணியன் சொல்லிதான் நான் செந்தில்நாதனை சந்தித்தேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல செந்தில்நாதன் என்னிடம் பணம் பெறவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க செந்தில்நாதன் பெயரை குறிப்பிட்டு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் செந்தில்நாதனை நேரடியாக பார்த்து பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பணம் கொடுத்தேன்.

**2, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை என தெரிவிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

ஒம்/- எல். ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.